செ.வெ.எண்:23 நாள்:15.09.2020

பெரம்பலூர் மாவட்டம்

**ஊரக வளர்ச்சித்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளின் மூலம் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா,இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

ஊரக வளர்ச்சித்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளின் மூலம் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் இன்று 15.09.2020 நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**அதன் விவரம் வருமாறு:**

பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த பள்ளி கட்டிடங்கள் மேம்படுத்தும் திட்டம் (RCSIDS 2019-20) திட்டம், தேசிய கிராம சுய வேலைவாய்ப்பு திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதி திட்டம் (MLACDS), பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (MPLADS), ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் (SCPAR SCHEME), நபார்டு திட்டத்தின் கீழ் சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கும் பணிகள், தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TNRRIS), மூலதன நிதி திட்டம் (CGF), மற்றும் பசுமை வீடுகள் கட்டும் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம், தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் (MCC), மாநில நிதிக்குழு மானியத்தின் மூலம் நடைபெற்று வரும் பணிகள் என உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில் இன்று (15.09.2020) பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அடைக்கம்பட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ்40 இலட்சம் மதிப்பீட்டில் வாரசந்தை கட்டும் பணியும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதி திட்டத்தின் கீழ் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் இருசக்கர வாகனம் நிறுத்தும் கட்டிடம் கட்டும் பணியும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.19.72 இலட்சம் மதிப்பீட்டில் அடைக்கம்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டும் பணியும், நபார்டு திட்டத்தின் கீழ் அடைக்கம்பட்டி முதல் நாகலாபுரம் வரை 1.650 கி.மீ தொலைவிற்கு தார்சாலை அமைக்கும் பணிகளையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முன்னதாக கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவுக்கு புதிய கட்டிடம் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு திட்டத்தின் கீழ் பெரம்பலூர் கால்நடை மருந்தக வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் மொத்தம் 8 அறைகள் மற்றும் 2 ஆய்வக சோதனை பொருட்கள் தயாரிப்பு அறைகளுடன், இரண்டு தளங்களைக் கொண்டுள்ளது. தரை தளத்தில் தயாரிப்பு அறை, வாக்-இன் குளிர் அறை, நோய் கிருமி ஒழிப்பு அறை, மருத்துவர்கள் அறை, பெண்கள் மற்றும் ஊனமுற்றோருக்கான கழிப்பறைகள் ஆகியன அமைந்துள்ளன. முதல் மாடியில் அலுவலக அறை, உதவி இயக்குநர் அறை, இரண்டு நுண்ணுயிரியல் ஆய்வகங்கள், ஆய்வக சோதனை பொருட்கள் தயாரிப்பு அறை மற்றும் ஆண்கள் கழிப்பறை ஆகியவை அமைந்துள்ளன. பல்வேறு தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆய்வகம் கால்நடை நோய்களை முன்கூட்டியே கண்டறிதல், தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் போன்ற தொழில்நுட்பங்களுகளுடன் கட்டப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். மேலும் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். பொதுமக்களின் வசதிக்காக தமிழக அரசால் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை உயரிய தரத்துடன் விரைவாக முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தொடர்புடைய அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது செயற்பொறியாளர்(ஊ.வ.து) செந்தில் குமார், கால்நடை பராமரிப்பு துறையின் மண்டல இணை இயக்குநர் மரு.சுரேஷ் கிறிஸ்டோபர், கால்நடை பராமரிப்பு துறையின் துணை இயக்குநர் குணசேகர், இளநிலை பொறியாளர்(ஊ.வ.து) செல்வராஜ், ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவர்கள் முரளி, லட்சுமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.